# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 03.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 7272/E/2019**

திரு.S.மாணிக்கவாசகம் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேல்முறையீட்டாளர் 04.04.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், தங்கள் அலுவலகத்தில் 27.09.2017 அன்று தன்னையும், BPCL தரப்பையும் விசாரித்தபின் BPCL அளித்த அத்தனை கடிதங்களின் நகல்கள், PESO 18/08/2017 தேதியிட்ட கடிதத்திற்கு பின் அனுப்பிய மற்றைய கடிதங்களின் நகல்கள், தங்கள் அலுவலகத்திலிருந்து மேற்படி இடத்தின் விசாரணைக்காக அருப்புக்கோட்டையில் உள்ள அலுவலகங்களுக்கு அனுப்பிய கடிதங்கள் மற்றும் நினைவூட்டுகளின் நகல்கள் உள்ளிட்ட 5 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 29.04.2019 தேதியிட்ட கடிதத்தில் கோப்பு நடவடிக்கையில் உள்ளதால் சட்டப்பிரிவு 2(f)-ன்படி தகவல் வழங்க வழிவகை இல்லை என்று தெரிவித்து தகவல் வழங்க மறுத்துள்ளதாக கூறி மேல்முறையீட்டாளர் 16.05.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான மனுவை முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு செய்திட, அவர் 10.06.2019 தேதியிட்ட கடிதத்தில் பொதுத் தகவல் அலுவலரின் கருத்தையே தெரிவித்துள்ளது உரிய தகவல் அல்ல என்றும், தனக்கு தகவல்களை வழங்கிட உத்தரவிடக் கோரியும், 15.07.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார்.

2. அந்த மனு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரப்பெற்ற தேதியின் அடிப்படையில் காலவரிசை பட்டியலிடப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் பல மாதங்கள் ஆகியும் முழுமையான தகவல் வழங்கப்படாத மேல்முறையீட்டாளர்களின் நிலுவை மனுக்களின் மீது மாநில தகவல் ஆணையர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களுடன் 29.09.2020 அன்று தொலைபேசி மூலம் விவாதிக்கப்பட்ட இருந்த நிலையில், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் 13.10.2020 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேல்முறையீட்டாளர் 09.10.2020 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தகவல்களை பெற்றுக் கொண்டு ஏற்பளிப்பு செய்துள்ளதாக தெரிவித்து, மேல்முறையீட்டாளர் தகவல்களை பெற்றுக் கொண்டதாக ஏற்பளிப்பு செய்த 09.10.2020 தேதியிட்ட கடிதத்தினை இணைத்து அனுப்பியுள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டு ஏற்பளிப்பு செய்துள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7272/E/2019</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விருதுநகர்.

திரு.S.மாணிக்கவாசகம் த/பெ.P/சுந்தரமகாலிங்க நாடார்,
3, (புதிய எண்.23), அம்பலம் குளிமுத்து நாடார் தெரு,
அருப்புக்கோட்டை-626 101,
விருதுநகர் மாவட்டம்.

Copy to: File

RJ/PS 06.11.2020